2019-ம் வருடம் பிப்ரவரி மாதம் 9-ம்தேதி சனிக்கிழமை மாலை 4.00மணிக்கு நடைபெற்ற கூட்ட நடவடிக்கையின் உண்மைநகல்:

முன்னிலை: திரு.எல்.குமார்.பி.இ.
தனி அலுவலர், ஆம்பூர் நகராட்சி.

----------

1. இந் நகராட்சியில் பேருந்து நிலையத்தில் உள்ள நகராட்சி கடைஎண்.23 வரிவிதிப்பு எண்.023/1331-ஐ குத்தகை உரிமதாரர் திரு.ஆர்.சிதம்பரம் என்பவர் மாத வாடகை உயர்வு செய்யப்பட்டுள்ள ஆணையினை ரத்து செய்ய கோரி வழக்குஎண். டபள்யுபி.எண். 1349/19-ல் நாள் 21.01.2019ல் தொடர்ந்துள்ளார். மேற்படி வழக்கில் ஆம்பூர் நகராட்சி சார்பாக ஆஜராகவும், அதற்கான தொகை ரூ.15,000/-ஐ (ரூபாய் பதினைந்தாயிரம் மட்டும்) அரசு வழக்கறிஞர் திரு.ஆர்.கோவிந்தசாமி, சென்னை உயர்நீதிமன்றம் அவர்களுக்கு வழங்க முன்அனுமதி கோரப்படுகிறது.

அலுவலககுறிப்பு:

1. அங்கீகரிக்கலாம்.
2. மேற்படி செலவினத்தை பொது நிதியிலிருந்து செலவு செய்யவும் அனுமதிக்கலாம்.

ந.க.எண்.23/19/அ3

தீர்மான எண்.176: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

2. இந் நகராட்சியில் வருவாய் நிதியின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 08.02.2019-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | வார்டு.எண்.4-ல் அப்புகான் தெருவில் மழைநீர் வடிகால்வாய் அமைத்தல் மற்றும் கஸ்பா.அ பிரதான சாலையில் புதுதெரு சந்திப்பு மற்றும் மந்தக்கரை திருப்பத்தில் சிறுபாலங்கள் அமைத்தல் | 10.00 | 1.ஆர்.இசைசெல்வமூர்த்தி<br>2.வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டைவிடகுறைவு<br>1.15% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 2 | வார்டு.எண்.9-ல் ஆயிஷாபீ நகர் 4-வது மற்றும் 5-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலம் அமைத்தல் | 10.00 | 1.கே.ஜி.தீனதயாளன்<br>2.வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டைவிடகுறைவு<br>1.20% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 3 | வார்டு.எண்.17-ல் சின்ன மசூதி தெரு மேற்கு மற்றும் காடி தெரு சந்திப்பில் காங்கர்தக்கியா மசூதி பின்புறம் மற்றும் ஓ.வி.ரோடு பகுதியில் பழுதடைந்துள்ள மழைநீர் வடிகால்வாயினை அப்புறப்படுத்தி புதியதாக மழைநீர் வடிகால்வாய் மற்றும் சிறுபாலமங்கள் அமைத்தல் | 5.00 | 1.எம்.உதயகுமார்<br>2. ஆர்.இசைசெல்வமூர்த்தி | 0.05% மதிப்பீட்டைவிடகுறைவு<br>1.10% மதிப்பீட்டைவிட அதிகம் |
| 4 | ஆசனாம்பட்டு ரோடில் உள்ள நகர்புற ஆரம்ப சுகாதார நிலைய காலி இடத்தில் கூடுதல் அறை கட்டுதல் | 10.00 | 1.எஸ்.அருணாசலம்<br>2.ஏ.வி.நாகராஜன் | 0.06% மதிப்பீட்டைவிடகுறைவு<br>1.25% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:-அ) வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு. ஆர்.இசைசெல்வமூர்த்தி ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு. கே.ஜி.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு. எம்.உதயகுமார் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
வ.எண்.1-ல் குறிப்பிட்டுள்ள பணிக்கு திப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு. எஸ்.அருணாசலம் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.18/2019/இ1
தீர்மான எண்.177: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

3. இந் நகராட்சியில் கல்வி நிதியின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரம் வழங்கப்பட்ட கீழ் குறிப்பிட்டுள்ள பணிக்கு 08.02.2019-ம் தேதி அன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளிகளின் விவரம் கீழ்வருமாறு பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்பட்டுள்ளது.

| வ. எண் | பணியின் விவரம் | மதிப்பீடு தொகை (ரு.இலட் சத்தில்) | ஒப்பந்தாரர் பெயர் (திரு/திருமதி) | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1. | அழகாபுரி நகராட்சி ஆரம்ப பள்ளியில் பராமரிப்பு பணிகள் மேற்கொள்ளுதல், மின் பணிகள் செய்யதல், வர்ணம் பூசுதல் மற்றும் குடிநீர் வசதி செய்யதல் | 7.90 | 1.எம்.தீனதயாளன்<br>2.வி.பாஸ்கர் | 0.06% மதிப்பீட்டைவிட குறைவு<br>1.15% மதிப்பீட்டைவிட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:- மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் மதிப்பீட்டைவிட குறைவாக கொடுத்துள்ள திரு. எம்.தீனதயாளன் ஒப்பந்ததாரின் ஒப்பந்தப்புள்ளியை அங்கீகரிக்கலாம்.
ந.க.எண்.20/2019/இ1
தீர்மான எண்.178: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

4. இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணிப்புரியும் துப்புரவு அலுவலர், துப்புரவு ஆய்வர், துப்புரவுப்பணி மேற்பார்வையாளர் ஆகியோருக்கு தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் பணிப்புரியும் மேற்பார்வையாளர்கள் மற்றும் பரப்புரையாளர்கள் ஆகியோரை தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திடக்கழிவு மேலாண்மை பயிற்சி வகுப்பிற்கு மேற்குறிப்பிட்ட அனைவரையும் சுபலஷ்மி திருமண மஹால், திருவண்ணாமலை பயிற்சி மையத்திற்கு நான்கு சக்கர வேனில் அழைத்துச் சென்று வரப்பட்டமைக்கு வேன் வாடகை ரூ.8500/-(ருபாய் எட்டாயிரத்து ஐநூறு மட்டும்) செலவு செய்தமைக்கு திரு.எம்.பாஸ்கர், துப்புரவு அலுவலருக்கு மேற்படி தொகை வழங்க அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு: அ. அனுமதிக்கலாம்.
ஆ. மேற்படி செலவுத் தொகையை 7$^{th}$ SHPC Capacity Buiding தொகையிலிருந்து வழங்க அனுமதிக்கலாம்.
இ. அவசர அவசியம் கருதி மேற்படி செலவுத்தொகையினை தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று செலவு செய்தமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண். 35 /19/எச்1
தீர்மான எண்.179: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது.

5. இந் நகராட்சியில் 2018-19ம் ஆண்டு தூய்மை இந்தியா திட்டத்தில் எடுத்துக் கொள்ளப்பட்ட ஒருங்கிணைந்த திடக்கழிவு மேலாண்மை பணிகளுக்கு ( நான்கு பணிகள்) ஒப்பந்தப்புள்ளிகள் வரவழைக்க வேண்டி ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை மாநில அளவில் தமிழ் மற்றும் ஆங்கில நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பரக் கட்டணத் தொகை ரூ.1,24,790/-ஐ (ரூபாய் ஒரு லட்சத்து இருபத்திநான்காயிரத்து ஏழு நூற்று தொண்ணூறு மட்டும்) சென்னை எலிகண்ட் பப்ளிசிட்டிஸ் நிறுவனத்திற்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு: அ. அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி தொகையை வருவாய் நிதியிலிருந்து செலுத்தவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.331/2018/இ1

தீர்மான எண்.180: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

6.இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிகளுக்கு 07.02.2019-ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணயின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சிக்கு சொந்தமான பேருந்து நிலையத்தில் பொருத்தப்பட்டுள்ள பழைய மின்விளக்குகள் பழுதடைந்துள்ளதால், பழைய ஒயரிங்களை மாற்றி புதியதாக 15 எண்ணிக்கை 80 வாட்ஸ் LED மின்விளக்குகளை மற்றும் இதர மின் உபகரணங்களை பொருத்தி தனியங்கி On and Off Swatches அமைத்தல். | 2.90 | 1.எஸ். அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.07% மதிப்பீட்டை விட குறைவு.<br><br>1.50% மதிப்பீட்டை விட அதிகம். |
| 2 | இந்நகராட்சி வார்டு எண்.01 முதல் 24 வரையுள்ள பகுதிகளில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளை தனியார் மூலம் பராமரிப்பு செய்தல். | 9.90 | 1.எஸ். அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு.<br><br>1.20% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:**

மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு.எஸ்.அருணாசலம், ஓப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.

ந.க.எண். 67/2019/இ2

தீர்மான எண்.181: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

7. இந்நகராட்சியில் கீழ்கண்ட பணிக்கு தீர்மான எண் 152 நாள்: 18.01.2019-ல் அங்கிகாரம் பெற்று 06.02.2019-ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண் | பணயின் விவரம் | மதிப்பீடு தொகை (ருபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|---|
| 1 | இந்நகராட்சி வார்டு எண் 01 முதல் 24 வரையுள்ள பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளுக்கு 60 எண்ணிக்கை தனியங்கி On and Off Swatches சப்ளை செய்தல் மற்றும் பொருத்துதல். | 8.00 | 1.எஸ். அருணாசலம்<br><br>2. ஏ.வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு.<br>1.20% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:**
மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் குறைவான ஒப்பந்தபுள்ளி அளித்துள்ள திரு. எஸ். அருணாசலம், ஒப்பந்ததாரரின் ஒப்பந்தபுள்ளியினை அங்கீகரிக்கலாம்.
**ந.க.எண். 87/2019/இ2**
தீர்மான எண்.182: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

8. இந் நகராட்சிக்கு சொந்தமான அலுவலக ஈப்பு வாகன எண் TN23 BX3308-ல் எற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்யும் பணிக்கு 31.01.2019-ம் தேதி விலைப்புள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள விலைப்புள்ளிகள் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகின்றது.

| **வ. எண்** | **நிறுவனத்தின் பெயர் மற்றும் முகவரி** | **விலைப்புள்ளி தொகை** |
|---|---|---|
| 1 | பி. கோவிந்தசாமி, பவானி ஆட்டோ கேரேஜ், ஆம்பூர் | 12800 |
| 2 | விஜய் டிராக்டர் ஒர்க்ஸ், பைபாஸ் ரோடு, ஆம்பூர் | 12900 |
| 3 | ஸ்ரீ விநாயகா ஆட்டோ ஒர்க்ஸ், எம்.சி. ரோடு, ஆம்பூர் | 13220 |

**அலுவலக குறிப்பு:**
1. மேற்கண்ட பணிக்கு ஆகும் செலவின தொகைக்கு அங்கீகாரம் வழங்கலாம். மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும், அங்கீகாரம் வழங்கலாம்.
2. மேற்கண்ட வாகனத்தின் பழுதுகளை சரி செய்ய, குறைவான விலைப்புள்ளி அளித்துள்ள பி. கோவிந்தசாமி, பவானி ஆட்டோ கேரேஜ், ஆம்பூர் என்பவரின் குறைவான விலைப்புள்ளிக்கு அங்கீகாரம் வழங்கலாம்.
3. அலுவலக பணியின் அவசியத்தை கருதி தனிஅலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண். 41/2019/இ2**

தீர்மான எண்.183: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

9. இந்நகராட்சி அலுவலக பயன்பாட்டில் உள்ள கணிணி , பிரிண்டர்கள் ஆகியவற்றை பராமரிப்பு செய்யும் பணிக்கு தீர்மான எண் 78 நாள்: 30.08.2018-ல் அங்கீகாரம் பெற்று 30.01.2019-ம் தேதி ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்றுள்ள ஒப்பந்தபுள்ளிகளின் விவரம் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| நிறுவனத்தின் பெயர் மற்றும் விலாசம் | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|
| 1. ஜி.ஆர். சிஸ்டம்ஸ், எஸ்.கே.ரோடு, ஆம்பூர் | 0.30% மதிப்பீட்டை விட குறைவு |
| 2. சிவா எலக்ட்ரானிக்ஸ், எஸ்.கே.ரோடு, ஆம்பூர் | 1.20% மதிப்பீட்டை விட அதிகம் |

அலுவலகக்குறிப்பு:1.மேற்குறிப்பிட்டுள்ள பணிக்கு குறைவான ஒப்பந்தப்புள்ளி அளித்துள்ள ஜி.ஆர்.சிஸ்டம்ஸ், ஆம்பூர் என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.

2.அலுவலக பணியின் அவசர அவசியத்தை கருதி, மேற்படி பணிக்கு தனி அலுவலரின் முன்அனுமதி பெற்று பணி உத்திரவு வழங்கியமைக்கு அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்.828/2018/இ2

தீர்மான எண்.184: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

10. இந்நகராட்சிக்கு சொந்தமான தலைமை நீரேற்று நிலையங்களான சாரங்கல், நரியம்பட்டு, ஆணைமடுகு (மாங்காய் தோப்பு) வண்ணாந்துரை, நதிசீலாபுரம் மற்றும் சாணிக்கணவாய் மேடு ஆகிய நிலையங்களில் உள்ள நீர் உறிஞ்சி கிணறு திறந்த வெளி கிணறு மற்றும் ஆழ்துறை கிணறு, மேலும் நகராட்சி எல்லைக்குட்பட்ட நகராட்சிக்கு சொந்தமான திறந்தவெளி கிணறுகளில் உள்ள மின்மோட்டார் மற்றும் குழாய் வால்வுகளை இயக்கவும் நகராட்சியில் போதுமான பணியாட்கள் இல்லாததால் மேற்படி பணியினை தனியார் மூலம் (Out Sourcing) 16 எண்ணிக்கை பணியாளர்களை கொண்டு **(எப்ரல்-2019 முதல் மார்ச் -2020 வரை) 12** மாத காலத்திற்கு பணியினை மேற்கொள்ளவும், EPF தொழிலாளர் சேமநலநிதி தொகை செலுத்திடவும் ஆகும் உத்தேச செலவினத் தொகை **ரூ.18.00** லட்சத்திற்கு அங்கீகாரம் அங்கீகாரம் கோரப்படுகிறது.

**அலுவலகக்குறிப்பு:**

அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை குடிநீர்நிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

**ந.க.எண்: 102/2019/இ2**

தீர்மான எண்.185: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

11. இந்நகராட்சி கீழ்கண்ட பணிகளுக்கு 22.01.2019-ம் தேதியன்று ஒப்பந்தபுள்ளிகள் கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளிகள் விவரம் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| பணயின் விவரம் | மதிப்பீடு தொகை (ரூபாய் லட்சத்தில்) | ஒப்பந்ததாரர் பெயர் திரு/திருமதி | ஒப்பந்தப்புள்ளி சதவீதம் |
|---|---|---|---|
| இந்நகராட்சி குடிநீர் விநியோகத்திக்கு தேவையான Sodium Hypo chlorite Solution ( Bleaching liquid) liquid concentration powder 4 to 6% (Grade -1) basis as per IS 11673-1992 - 57600 லிட்டர் சப்ளை செய்தல். | 9.95 | 1. ஸ்ரீ ராஜகணபதி இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ்<br>2. ஸ்ரீ சபரி இஞ்ஜினியரிங் | 0.99% மதிப்பீட்டை விட குறைவு.<br>1.00% மதிப்பீட்டை விட அதிகம் |
| இந்நகராட்சி வார்டு எண் 25 முதல் 36 வரையுள்ள பகுதியில் பொருத்தப்பட்டுள்ள தெருவிளக்குகளுக்கு 49 எண்ணிக்கை தனியங்கி On and Off Swatches சப்ளை செய்தல் மற்றும் பொருத்துதல். | 5.50 | 1.எஸ்.அருணாசலம்<br>2. ஏ.வி. நாகராஜன் | 0.05% மதிப்பீட்டை விட குறைவு.<br>1.10% மதிப்பீட்டை விட அதிகம். |

**அலுவலகக்குறிப்பு:** 1. மேற்குறிப்பிட்டுள்ள பணிகளுக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரரின் ஒப்பந்தப்புள்ளியினை அங்கீகரிக்கலாம்.
2.குடிநீர் விநியோகப்பணி மற்றும் தெருவிளக்கு பணியின் அவசியத்தை கருதி, தனிஅலுவலரின் முன்அனுமதி மேற்கண்ட பணிகளுக்கு குறைவான ஒப்பந்தபுள்ளி வழங்கியுள்ள ஒப்பந்ததாரர்க்கு பணிஉத்திரவு வழங்கியமைக்கும் அங்கீகரிகாரம் வழங்கலாம்.
**ந.க.எண். 46/2019/இ2**
தீர்மான எண்.186: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

12. இந் நகராட்சிக்கு சொந்தமான பெத்லகேம் நகராட்சி நடுநிலை பள்ளியின் தென் கிழக்கு பகுதியில் உள்ள இரண்டு வகுப்பறை கட்டிடங்கள் மற்றும் முதல் தளத்திற்கு வர்ணம் பூசி பராமரிப்பு செய்திடவும், பழுதடைந்துள்ள 1000 லிட்டர் கொள்ளளவு கொண்ட HDPE டேங்க் மற்றும் குழாய்களை மாற்றி புதியதாக பொருத்திடவும் அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.2.50 இலட்சத்திற்கும் (ருபாண் இரண்டு இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை கல்விநிதி தலைப்பின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்: 20/2019/இ1
தீர்மான எண்.187: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

13. ஆம்பூர் நகராட்சியின் சார்பாக பொங்கல் நல்வாழ்த்துக்களை தெரிவித்து நடைபெற்று வரும் திட்டப்பணிகள் விவரங்களை மாலைமுரசு நாளிதழில் விளம்பரம் செய்தமைக்கான விளம்பர கட்டணத் தொகை ரூ.16380/-ஐ (ருபாய் பதினதராயிரத்து முன்னூற்று என்பது மட்டும்) மேற்படி நாளிதழுக்கு செலுத்த அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலக குறிப்பு:- அங்கீகாரம் வழங்கலாம். மேற்படி விளம்பர கட்டணத் தொகையை நகராட்சி வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்.17/2019/இ1
தீர்மான எண்.188: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

14. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36-ல் உள்ள விவேகானந்தர் 2-வது தெருவில் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையால் மழைநீர் சாலையில் தேங்கி நின்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெருத்த இடையூறாக உள்ளதுடன் பொது சுகாதார சீர்கேடும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, விவேகானந்தர் 2-வது தெரு சந்திப்பிலிருந்து ஆற்று படுகை வரை புதியதாக மழைநீர் வடிகால்வாய் கட்டவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.8.00 இலட்சத்திற்கும்(ருபாய்.எட்டு இலட்சம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.
அலுவலகக்குறிப்பு:அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.
ந.க.எண்: 98/2019/இ1
தீர்மான எண்.189: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

15. இந் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.36-ல் உள்ள கஸ்தூரிபாய் தெரு மற்றும் ராஜீவ்காந்தி முதல் தெரு (அண்ணாமலையார் தெரு) விடுபட்ட பகுதி ஆகியவற்றில் மழைநீர் வடிகால்வாய் இல்லாமையால் மழைநீர் சாலையில் தேங்கி நின்று பொதுமக்களுக்கும், போக்குவரத்திற்கும் பெருத்த இடையூறாக உள்ளதுடன் பொது சுகாதார சீர்கேடும் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, கஸ்தூரிபாய் தெருவில் விவேகானந்தர் 2-வது தெரு சந்திப்பு வரையிலும், ராஜீவ்காந்தி முதல் தெரு (அண்ணாமலையார் தெரு) விடுபட்ட பகுதியிலும் மழைநீர் வடிகால்வாய் கட்டவும், அதற்காகும் மதிப்பீடு தொகை ரூ.8.60 லட்சத்திற்கும்(ரூபாய் எட்டு இலட்சத்து அறுபதாயிரம் மட்டும்) அங்கீகாரம் கோரப்படுகிறது.

அலுவலகக்குறிப்பு:அங்கீகாரம் வழங்கலாம்.மேற்கண்ட பணிக்காகும் செலவினத்தை வருவாய் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் அங்கீகாரம் வழங்கலாம்.

ந.க.எண்: 98/2019/இ1

தீர்மான எண்.190: அலுவலககுறிப்பு அங்கீகரிக்கப்பட்டது

ஒம்/-இல.குமார்,
தனி அலுவலர்

/உண்மைநகல்/

ஆணையாளர்(பொ),
ஆம்பூர் நகராட்சி